

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் மேல்மனம்பேடு ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் நடைபெற்ற தூய்மை இயக்கத்தினை (தூய்மை மிஷன் 2.0) சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைக்கும் விதமாக அரசு அலுவலங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க கழிவு பொருட்களை அகற்றும் பணிகளை மேற்கொண்டார். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், சண்.பிரகாஷ், செயற்பொறியாளர் தராஜவேல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) மோகனா, மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

## திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஒன்றியம்

# மேல்மனம்பேடு ஊராட்சியில் நடைபெற்ற தூய்மை இயக்கம் (தூய்மை மிஷன் 2.0)!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் செப் 20;

திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் மேல்மனம்பேடு ஊராட்சிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் நடைபெற்ற தூய்மை இயக்கத்தினை (தூய்மை மிஷன் 2.0) மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைக்கும் விதமாக அரசு அலுவலங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க கழிவு பொருட்களை அகற்றும் பணிகளை மேற்கொண்டார்.

தொடர்ந்து, அங்கன்வாடி மையங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க கழிவு பொருட்களை அகற்றி அமைக்கப்பட்டுள்ள சமையலறை தோட்டத்தை பார்வையிட்டு, வீடு வீடாக சென்று குப்பை கழிவுகளை சேகரிக்கும் பணிகளையும் மேற்கொண்டனர். மேலும், மாணவ மாணவியர்களுடன் உறுதிமொழி ஏற்றுக் கொண்டு. தூய்மை திருவள்ளூர் செயலி அறிமுகத்தினை தொடங்கி வைத்து, மேல்மனம்பேடு ஊராட்சியில் 8 தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு கவச உபகரணங்களை வழங்கி, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 490 தூய்மை பணியாளர்களுக்கும் பாதுகாப்பு கவச உபகரணங்களை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.சா.மு. நாசர் அவர்கள் வழங்கினார்.

மேலும் அரசு பள்ளி மாணவர்கள் சார்பாக நடத்தப்பட்ட குப்பைக் கழிவுகளை அகற்றுவது தொடர்பான அறிவியல் கண்காட்சியினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் வை.ஜெயக்குமார், ஒன்றிய செயலாளர் டி.தேசிங்கு, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், எஸ்.ஜெயபாலன், சண். பிரகாஷ், செயற்பொறியாளர் தராஜவேல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) திருமதி. மோகனா, ஒருங்கினைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் லலிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முரளி மகேஷ் பாபு, பூவிருந்தவல்லி வட்டாட்சியர் , உதயம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

## சென்னை மேற்கு மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ஆர்.என்.துரையின் தாயார்

# திருமதி. ஆர்.கண்ணம்மாள் ரங்கநாதன் முதலாமாண்டு நினைவு நாள் - சமபந்தி விருந்து!

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – டி.கே.எஸ். இளங்கோவன் வழங்குகின்றனர்!

சென்னை, செப்.20

சென்னை மேற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என். துரையின் தாயார் திருமதி. ஆர்.கண்ணம்மாள் ரங்கநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (21.09.2025, ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில் வி.பி.ராமன் (லாயிட்ஸ்) சாலை, வி.எம்.தெரு சந்திப்பு அருகில் திருவல்லிக்கேணி பகுதிக் கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. முன்னிலையில், வட்ட கழக செயலாளர் லைனர் கே.பிரபு தலைமையில், பகுதி கழக துணை செயலாளர் கே.திருநாவுக்கரசு, கழக பொதுக்குழு உறுப்பினர் வே.கமலாசெழியன் வரவேற்புரையில் சமபந்தி விருந்து நடைபெறுகிறது.



சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் சமபந்தி விருந்தினை துவக்கி வைக்கின்றனர்.

இதில் மாநில மாவட்ட நிர்வாகிகள்,: து.விக்டர், வி.எஸ்.கலை, ஏ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, மரு.அ.சுபேர்கான், வி.பி. பொன்னரசு, வி.என். ராஜன், ப.பிரகாஷ், ரவி ராஜ்குமார், மரு. எஸ்.ஏ.எஸ்.ஹபீஸ்புல்லா, ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, வி.ஆர்.விஜய், ச. அசோக்குமார், எம்.கே.ஆனந்த்,

பகுதி நிர்வாகிகள்: ம.தயாநிதி, சி.தினகரன், ஆர்.பத்மாவதி, எம். பிரேம்ராஜா,

வட்ட கழக செயலாளர்கள்: க.வே.மோகன், ஐசிஎஃப் சங்கர், ஜெ.விஜயகுமார், என்.ரவி, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார்.

மாவட்ட பிரதிநிதிகள்: ஏ.பி.வேலு, எம்.கலில் ரஹ்மான், ஆர்.சசிகுமார், ஆர். ராஜ்குமார், வெ.சீனிவாசன், ஆர்.கஜேந்திரன்,

எஸ்.விஜயகுமார், எல். துளசிராமன், ஏ. விக்னேஸ்வரன், மங்கை ராஜ்குமார் எம்.சி.

மாவட்ட துணை அமைப்பாளர்கள்: வே. சௌந்தர்ராஜன், வி.தினேஷ்குமார், ஜே.கதிரேசன், எஸ்.ஏ.ரஹ்மான் ஷெரிப், இரா.சங்கர், புல்லட் பி.கணேசன், எம். மோகன், ஆர்.கணேசமூர்த்தி, கே.ஜெகன், ஏ.செல்வம், ராஜ்குமார், அல்லூரி சீனிவாசன்,

பகுதி அணிகளின் அமைப்பாளர்கள்: எம்.ஏ.சஜ்ஜாத், என்.ரத்திஷ், கு.சரவணகுமார், ஆர்.ரஞ்சித்குமார், எல். பாலு, எம்.சுமதி, வி.தேசராணி, எஸ்.விஜயசாரதி, பி.ஏ.மணிகண்டன், எம். முகுந்தன், ஏ.ரசாக்பாஷா

செ.அழகம்மாள் (எ) சித்ரா, மு.ஜோதிஸ் (எ) அசோக், சி.மீனாட்சி, க. கற்பகம், மு.தேவா, ஆர். சிலம்பரசன்,

வட்ட நிர்வாகிகள் : சி.வாசன், கே.ரவி, ஜெ. அன்பரசன், ஆ.காமாட்சி, கோ.மகேஷ், எம்.எஸ். வசந்த், கோ.தனசேகரன், ச.ரமேஷ், ஆர்.ராதாகிருஷ்ணன், டி.ஜெபஸ்டின், போட்டோ க.அசோக், க.மோகன், டி.குப்புசாமி, மோ.பிரபு, கு.சதிஷ், எம். நவநீதராஜ், ஆர்.ஹரி, செ.மீனாட்சி, ஆர்.பாபு, ஆர்.மணிகண்டன், ஆர். புவனேஸ்வரன், ஆர்.அரவிந்தன், மு.கோவிந்தராஜ், டி.சசிகுமார்,

எஸ்.சாந்தி, உ.ஹேமாவதி, பி.ஜெயலட்சுமி, ஜே. மைதிலி, ச.ம.அரிஹரன், பி.மேரி, ஏ.ராமதாஸ், கே. அருண், நடராஜன், எம். செல்வி, இந்திரா தேவி, பாவனி மணி, வடிவேல்முருகன், எம்.நந்தகுமார், பி.சுந்தர், ஏ. அண்ணாதுரை, சி.நவின்குமார், எஸ்.கல்பனா, கே.பத்மாவதி, நினைவுடன்: கோ. மல்லிகா, ஆர்.ராஜேந்திரன், ஆர்.ராஜா, ஆர். முன்னா (எ) செல்வகுமார், ஆர்.பாபு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என். துரை நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்துள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பேரூராட்சி தபால் தெரு பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி மேம்பாட்டில் ரூபாய் 35 லட்சம் நபார்டு நிதி 132 லட்சம், மொத்தம் 1.64 கோடி மதிப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ள தரைப்பாலம் மற்றும் தார் சாலை பணியை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் ஆய்வு செய்தார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், எம்.கேசவன், கே.வி.நாகராஜ், டி.மஸ்தான், அர்ஜீன், செயல் அலுவலர் பாஸ்கர் ஆகியோர் உடன் இருந்தனர்.



கும்மிடிப்பூண்டி ஒன்றியம் அயநல்லூர், ஏனாதிமேல்பாக்கம், குருவாட்டுச்சேரி ஆகிய ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கைகளை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறை நேரில் பார்வையிட்டு மனுதார்களுடன் நேரடியாக உரையாடி துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து அவர்களின் தேவைகளுக்கு உடன நிவாரணம் வழங்குமாறு முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பிருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் மு. மணிபாலன். எஸ்.ரமேஷ் கே.வி நாகராஜ். எஸ்.எம்.திருநாவுக்கரசு டி மஸ்தான் இளவரசன், எம்.ஜெயசந்திரன் கல்விசெல்வம். பழனியிள்ளை உமாபதி பாப்பையன் நந்தன். சொக்கலிங்கம் சரவணன், அர்ஜீனன் பிடிஒ அமிர்தமன்னன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மு.கேசவன் எஸ் உதயகுமார் உள்ளனர்.

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. – ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# சென்னை வடக்கில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ மாபெரும் பொதுக் கூட்டம்!

## கவிஞர் மனுஷ்யபுத்திரன் சிறப்புரை! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, செப். 20-

சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், அறிவித்தபடி சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்’தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன்’ ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்புக் கூட்டம்! 20.09.2025 இன்று மாலை 6.00 மணிக்கு ஏ.இ.கோயில் தெரு, தண்டையார் பேட்டை நெடுஞ்சாலையில் எனது (மாவட்டபொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.,) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் இரா.லட்



சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், வ.பெ. சுரேஷ், இரா.செந்தில்குமார், க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை, வி.தயாளன் ஆகியோரின் வரவேற்புரையாற்ற. கழக தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், சிறப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, செ.ஜோதி (இளம் பேச்சாளர்) ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

இதில் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் கன்னிகை G.ஸ்டாலின், Dr.அ.சுபேர்கான், கே.வி. லோகேஷ் தலைமைசெயற்குழுஉறுப்பினர்கள் தா.இளையஅருணா, எம்.சி., ந.மனோகரன், இரா. கருணாநிதி, மாநில நிர்வாகிகள் இரா.மதிவாணன், என்.மருதுகணேஷ், பி.டி. பாண்டி செல்வம், இரா. நரேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் வே. சிவகுமார், கி.ராஜேந்திரன், நா.சண்முகம், சு.சேகர், பா.மதிவாணன், ஏ.தமிழ்ச்செல்வன், டி. கமலக்கண்ணன், க.அமுல், மற்றும் வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், அணைத்து அணிகளின் மாவட்ட - பகுதி நிர்வாகிகள், வட்டகழக நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA2) பாக உறுப்பினர்கள் (BLC), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA), இளைஞரணி வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இரா.ஆவுடையப்பன் தலைமை! திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மானம் விளக்க பொதுக்கூட்டம்!

## ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, செப்.20-

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலைகுணைய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான இயக்கு பொதுக்கூட்டம் இன்று 20.9.2025 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வள்ளியூர் கலையரங்கத்தில் மாவட்ட கழகச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்ட பொருளாளர் எம்.எஸ்.எஸ்.ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர் திருமதி.ப. தமயந்தி, மா.மைக்கல், வள்ளியூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஞா.சேவியர் செல்வராஜ், இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் தெற்கு ஒன்றிய செயலாளர் க.எரிக் ஜூடு, பணகுடி பேரூர் செயலாளர் வி.டி.தமிழ்வாணன், திசையன்விளை பேரூர் செயலாளர் சி.ஜான் கென்னடி ஆகியோர்கள் முன்னிலை வகிக்கிறார்கள். மாவட்ட அவைத்தலைவர் எம்.கிரகாம்பெல் வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட துணைச் செயலாளர் வெ. நம்பி தொகுப்புரை வழங்குகிறார்.

தி.மு.க தலைமை கழக துணை அமைப்புச் செயலாளரும், திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான வழக்கறிஞர் ப. தாயகம் கவி., எம்.எல்.ஏ., தீர்மான ஏற்பு விளக்கவுரை ஆற்றுகிறார். கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், நாங்குநேரி சட்டமன்ற தொகுதி பார்வையாளருமான என்.சுரேஷ்ராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞானதிரவியம், ஆ.பிரபாகரன், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் எம்.சிவராஜன், அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எம்.ஜோசப்ராஜ் ஆகியோர் உரையாற்றுகின்றனர். வள்ளியூர் பேரூர் செயலாளர் வி.எஸ்.எஸ்.சேதுராமலிங்கம் நன்றியுரை ஆற்றுகிறார்.

கூட்டத்தில் தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள் மாநில அணிகள் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கலந்து கொள்கின்றனர்.

## ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக் கூட்டம்!

# 123 ‘அ’ வட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன் வேண்டுகோள்!

சென்னை, செப். 20-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்! ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு கூட்டம் நாளை (21.09.2025-ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மயிலாப்பூரில்

தென்மேற்கு மாவட்டக்கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி, தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே.ஏழுமலை முன்னிலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இந்கூட்டத்திற்கு 123 அ வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரிதிநிதிகள், மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள் , பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி, பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென 123 அ வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் மூ. இராஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில், கழக அயலக மாநில துணைச் செயலாளர் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதிஇளம்சுருதி முன்னிலையில், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா. சுரேஷ் முன்னிலையில், அவைத் தலைவர் நா.சீனிவாசன் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் தெற்கு பகுதி திமுக 34வது வார்டு சார்பில் கழக செயல்வீரர் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எதிர்கொள்ள இருக்கிற 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மற்றும் தொகுதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதில் வட்டக் கழகச் செயலாளர் கா.தேவேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.